# பொலிஸ் அதிகாரியை கட்டாயலீவில் செல்லுமாறு

## அரசு பணிப்பு

(கொழும்பு)

பொலிஸ் உயர் அதிகாரி நரிமதாசன் உடுகம்பொலவை மூன்று மாத கட்டாய லீவில் செல்லும்படி இலங்கை அரசு கேட்டுள்ளது.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் கொழும்பில் நடாத்தவிருக்கும் கூட்டத்

4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | தை 04 | இதழ் 339
யாழ்ப்பாணம் | சனிக்கிழமை | 18—01—1992

## பிரிட்டனின் ஆயுததடையால் இலங்கைக்கு பாதிப்பு இல்லை

(கொழும்பு)

இலங்கைக்கு ஆயுத உதவி வழங்க பிரிட்டன் தடைவிதித்த போதும் அதனால் இலங்கைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளரான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

[4-ம் பக்கம் பார்க்க]

## உள்நாட்டு கலவரங்களுக்கு இடமில்லை — ஜனாதிபதி

(கொழும்பு)

இலங்கையில் உள்நாட்டுக் கலவரங்கள் ஏற்படுவதற்கோ பொருளாதாரமோ, நிர்வாகமோ சீர்குலைந்த நிலையடைவதற்கோ அரசாங்கம் ஒரு போதும் இடமளிக்கமாட்

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

★ இந்தியா பலவந்தமாக

# அகதிகளை அனுப்பிவைப்பதை ஐ. நா. சபை தடுக்கவேண்டும்!

## விடுதலைப்புலிகள் ஐ. நா.விடம் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

இந்தியாவில் தஞ்சம்புகுந்துள்ள இலங்கைத்தமிழ் அகதிகளை இந்தியா பலவந்தமாக திருப்பி அனுப்பும் நடவடிக்கையை ஐக்கிய நாடுகள்சபை தடுத்து நிறுத்தவேண்டும் என்று கோரி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திர ராசா ஐ. நா. செயலாளர் நாயகத்திற்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அக்கடிதத்தின் விபரம் வருமாறு:

பல ஆயிரம் தமிழ் அகதிகளை இலங்கைக்கு ஆயுதப் போர் அதிகரித்துள்ள இந்த நேரத்தில் மீளக்குடியமர்த்தல் என்ற பேரிலவயில் பலவந்தமாக அனுப்பப்படுவதால் அவர்கள் எதிர் நோக்கும்பயங்கரமான நிலைமை, தங்கள் மேலான கவனத்துக்கும், ஆலோசனைக்கும் கொண்டுவர விரும்புகின்றோம்.

இலங்கை அரசு திருமலை, வவுனியா, மன்னார் ஆகிய இடங்களில் அகதி முகாம்களை அமைத்துள்ளது. இதன் முதல் கட்டமாக 30 ஆயிரத்து 468 அகதிகள் கொண்டுவரப்படவுள்ளனர். இலங்கை இராணுவ நிர்வாகத்தின் கீழுள்ள பகுதிகளில் இவர்கள் அமர்த்தப் படுவதால், அவர்கள் கஷ்டங்களை அனுபவிக்கவேண்டிய அபாய நிலை ஏற்படுமென்பதைத் தங்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

ஏற்கனவே கிழக்கு மாகாணத்திலுள்ள அகதிகள் முகாம்

(4-ம் பக்கம் பார்க்க)

## முதல்தொகுதி அகதிகள் திங்கள் வர ஏற்பாடு

(சென்னை)

தமிழகத்திலிருந்து இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படும் இலங்கைத் தமிழ் அகதிகளில் முதல் தொகுதியினர் அடுத்த திங்கட்கிழமை சென்னையிலிருந்து கப்பல்மூலம் திருமலை

(4ம் பக்கம் பார்க்க)

## விசேட அடையாள அட்டை

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து திரும்பும் அகதிகளுக்கு விசேட அடையாள அட்டைகள் வழங்கப் படவுள்ளன.

வீடுகள் புனரமைப்பதற்கும் இவர்களுக்கு உதவிகள் வழங்கப்படும் என்றும் புனர்வாழ்வு அமைச்சு தெரிவித்துள்ளது.

## காங்கேசன்துறை துறைமுகம் உடனடியாக திறக்கப்படமாட்டாது!

(யாழ்ப்பாணம்)

காங்கேசன் துறை துறைமுகம் பொருட்கள் இறக்கும் வேலைக்காக உடனடியாக திறக்கப்படமாட்டாதென தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்க குழு யாழ் அரச அதிபருக்கு அறிவித்துள்ளது.

காங்கேசனில் உள்ள உணவுக் களஞ்சியம் திருத்தப்பட வேண்டியிருப்பதாலும், துறை

(4-ம் பக்கம் பார்க்க)

## பூஸா முகாமிலுள்ள மாணவர் கல்வி பாதிப்பு

(கொழும்பு)

பூஸா தடுப்பு முகாமிலுள்ள பல தமிழ் மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இம்முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர்களில் பலர் மாணவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

பல வருடங்களாக இவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதால் தமது கல்வியைத் தொடர முடியாத நிலையிலுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவர்கள் கல்வியைத்

(4-ம் பக்கம் பார்க்க)

தடுத்துவைக்கப்பட்டுள்ள

## தமிழ் இளைஞர்மீதான விசாரணைகள் ஆரம்பம்!

(கொழும்பு)

மகஸின் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்கள் மீதான விசாரணைகளை கடந்த சில தினங்களாக தான் மேற்கொண்டு வருவதாகவும் பூஸா, களுத்துறை மற்றும் ஏனைய இடங்களில் காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்கள் மீதான விசாரணையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் காணாமல் போனோர் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவரான டி. ஜே. ஜயலத் தெரிவித்துள்ளார்.

மேற்படி விசாரணைகள் பூர்த்தியானதும் எந்தவிதமான

(4-ம் பக்கம் பார்க்க)

## விண்ணப்ப திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக அனுமதிகள் 1991/1992 ஆம் கல்வியாண்டுக்கான விண்ணப்பங்களை ஏற்கும் முடிவுத்திகதி நீடிப்

[4ம் பக்கம் பார்க்க]

## படை அதிகாரியும் பலி

(கொழும்பு)

மன்னாரில் நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட திடீர் தாக்குதலில் ஒரு அதிகாரி உட்பட 9 படையினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதாக பாதுகாப்பு

(4ம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்னை விவகாரத்தில் இந்தியா இலங்கைக்கு ஆதரவு

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் இலங்கையின் நிலைப்பாட்டிற்கு இந்தியா ஆதரவு தெரிவித்துள்ளதாக இலங்கை வெளியுறவுச் செயலாளர் திரு. பேர்னாட் திலகரத்ன தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் அண்மையில் இந்திய அரசுடன் நடத்திய பேச்சுவார்த்தையின்போது இனப்பிரச்னையைத் தீர்க்க இலங்கை அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் பற்றி விளக்கி கூறியபோதே இந்தியா அவர் தெரிவித்தார்.

இப்பேச்சுவார்த்தையின் போது இனப்பிரச்னை விவகா

(4-ம் பக்கம் பார்க்க)

## 5 இலங்கை மீனவர் தமிழகத்தில் கைது

(சென்னை)

தமிழகம் கன்னியாகுமரி மாவட்ட கடலோரப் பகுதியில் வள்ளம் மொன்றில்வைத்து இலங்கை மீனவர்கள் ஐவர் தமிழக கரையோர காவல்துறையினரால் கைது செய்யப்பட்டனர்.

அனுமதியின்றி மீன்பிடி

(4ம் பக்கம் பார்க்க)

மீனவர் விடுவிப்பு பற்றி

## இராணுவத்தின் முடிவு 25ம் திகதி தெரியும்

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினரின் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள மீனவர்களின் விடுதலை தொடர்பாக தமது முடிவை எதிர்வரும் 25ம் திகதி இராணுவத்தினர் தெரிவிப்பர்.

(4-ம் பக்கம் பார்க்க)

